Judicial Form No.53
(See Rule 43)
DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**STC.No.194/2022**

**2024-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 07- ம் நாள் திங்கள்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 02 - வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி. லட்சுமி இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 02 | தொழில் | - | பெட்டிக்கடை |
| பெயர் | - | ரமணி | வட்டம் | - | வால்பாறை |
| க/பெ | - | அரவிந்தன் | சமயம் | - | |
| கிராமம் | - | கக்கன் காலனி | வயது | - | 76 |
| சாதி | - | - | | | |

**07.10.2024**

**(எதிரி ஆஜர்)**

(எதிரி தரப்பில் குவிமுச.பிரிவு 317-ன் கீழான மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.)

**முதல் விசாரணை:**

1. நான் வால்பாறை, கக்கன் காலனியில் பெட்டிக்கடை வைத்து நடத்தி வருகிறேன். எனக்கு வழக்கு சம்பந்தமாக எதுவும் தெரியாது. போலீசார் அழைத்ததற்காக நீதிமன்றம் வந்துள்ளேன். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரியதில் அனுமதி வழங்கப்பட்டு சாட்சி அரசு தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.)**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. நான் குடியிருக்கும் பகுதியில் குடியிருக்கும் ஆனந்த் என்பவர் சிபு என்பவர் வீட்டில் நான்கு மாடியில், 2 வது தளத்தில் குடியிருந்து வருவதாகவும், ஆனந்தின் வீட்டின் மொட்டை மாடியில் எங்க தெருவை சேர்ந்த சிறுவர்கள் எப்போதும் விளையாடி ஆனந்துக்கு மன உளைச்சலையும், அவரது வேலைக்கு இடஞ்சளையும் தொடர்ந்து ஏற்படுத்துவதாகவும், அவர் பல முறை அவர்களிடம் இங்கு விளையாடாதீர்கள் என்று கூறியதாகவும், நாங்கள் அப்படித்தான் விளையாடுவோம் என்று சொன்னதாகவும், 24.12.2020-ம் தேதி மாலை ஆனந்த் வீட்டில் அவர் வேலை செய்து கொண்டிருந்தபோது இடையூறாக சின்ன பையன்கள் வந்து விளையாடினார்கள். அவர்களை ஆனந்த் விரட்டிவிட்டார். அந்த சின்ன பையன்களை ஆனந்த் அடித்துவிட்டதாக அவர்களது பெற்றோர்களை அழைத்து வந்தார்கள். அவர்களோடு பாரத் சேனா அமைப்பை சேர்ந்தவர்களும் உடன் வந்தார்கள். மாலை சுமார் 06.30 மணியளவில் நடந்த சூழ்நிலையை ஆனந்த் சொல்லிக்கொண்டிருந்தபோது எதிரி

ஆனந்தை பார்த்து நீ என்னடா விளையாடுகிற பிள்ளைகளை விளையாட கூடாது என்று சொல்ற தாயோழி, கேனப்புண்ட என் அருவருப்பான வார்த்தைகளை பேசி ஆனந்தின் கன்னத்தில் ஓங்கி அடித்ததாகவும், ஆனந்தும் மரியாதையாக பேசு என்று சொன்னதற்கு குழந்தைகள் அப்படித்தான் விளையாடுவாங்க தேவடியா பயலே அதோடு உன்னை கொல்லுறேனா இல்லையா பாரு என்று மிரட்டியதோடு ஆனந்திற்கு கன்னத்தில் வலி இருந்ததால் அரசு மருத்துவமனைக்கு சென்றார் என்றும், போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது வழக்கு சம்பவம் தெரியாது என்று எதிரிக்கு ஆதரவாக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி. N.மீனாட்சி,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.

Judicial Form No.53
(See Rule 43)
DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**STC.No.194/2022**

**2024-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 07- ம் நாள் திங்கள்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 03 - வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி. லட்சுமி இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 03 | தொழில் | - | டெய்லர் |
| பெயர் | - | முரளி | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | நாகராஜன் | சமயம் | - | |
| கிராமம் | - | கக்கன் காலனி | வயது | - | |
| சாதி | - | - | | | |

**07.10.2024**

**(எதிரி ஆஜரில்லை)**

(எதிரி தரப்பில் குவிமுச.பிரிவு 317-ன் கீழான மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.)

**முதல் விசாரணை:**

1. நான் கக்கன் காலனியில் குடியிருந்து டெய்லர் கடை வைத்து நடத்தி வருகிறேன். கடந்த 3, 4 வருடங்களுக்கு முன்பு நான் ஒரு நாள் தேதி, மாதம் நினைவில்லை மதிய உணவிற்காக வீட்டிற்கு சென்று கொண்டிருந்தபோது கக்கன் காலனி ஜே.பி.ஆர் வீட்டருகில் வைத்து போலீசார் அங்கு விசாரித்ததாகவும் படம் ஏதோ வரைந்து அதில் என்னிடம் கையொப்பம் கேட்டார்கள். நான் கையொப்பம் செய்தேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். **(பார்வை மகஜர் அ.சா.ஆ.2-ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார் விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதியிருந்தது என்றால் சரிதான்.

**மறுவிசாரணை**

இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி. N.மீனாட்சி,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.